www.padippakam.com



# களம் பல கண்ட யாழ் கோட்டை

## பகுதி: ஒன்று
## பிலிப் தே ஒலிவேறா

**நீலவண்ணன்**

### 2

**2 பெப்ரவரி, 1621.**

யாழ்ப்பாண மன்னனுடன் ஏற்பட்ட மனக்கசப்பால், போர்த்துக்கேயர் மீண்டும் 1620-ம் ஆண்டு படையெடுத்து யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றிக் கொண்டனர். யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசிச் சுதந்திர மன்னன் சங்கிலி (குமாரன்) செகராசசேகரன், யாழ்ப்பாணம் தன் சுதந்திரத்தை இழந்த இறுதிப் போரில் சிறைப்பட்டு, மரணமடைய நேரிட்டது. போர்த்துக்கேயரின் இப் படையெடுப்பிற்கு 'கப்பித்தான் மேஜர்' பிலிப் தே ஒலிவேறா (Phillip de Oliveira) என்பான் தலைமை வகித்தான். 1621 ஆம் ஆண்டு பிலிப் தே ஒலிவேறா நல்லூரைத் தன் உறைவிடமாக்கிக் கொண்டான்.

நல்லூரில் பெரிய கோயிலாக நல்லூர்க் கந்தசுவாமி கோயில் விளங்கியது. இன்று முத்திரைச் சந்தியில் கிறிஸ்தவ தேவாலயம் இருக்குமிடத்தில் இக் கோவில் வானளாவிய ராஜகோபுரங்களுடனும், கோட்டை போன்ற மதிற் சுவர்களுடனும், தென்னிந்தியக் கோயில்களின் பாரிய வடிவில் அமைந்திருந்தது. பிலிப் தே ஒலிவேறா அப் பெரிய கோயிலை இடித்துத் தரைமட்டமாக்குமாறு கட்டளையிட்டான். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை அடி அத்திவாரத்தோடு கிளறிக் குவிக்குமாறு கட்டளையிட்டான். முருகைக் கற்களினாலும், சுண்ணாம்புக் கற்களினாலும் சுதைகொண்டு கட்டப்பட்டிருந்த அக் கோயிலின் கற்கள் மலைபோலக் குவிந்தன.


நல்லூரில் பெரிய கோயிலாக நல்லூர்க் கந்தசுவாமி கோயில் விளங்கியது. இன்று முத்திரைச் சந்தியில் கிறிஸ்தவ தேவாலயம் இருக்குமிடத்தில் இக் கோவில் வானளாவிய ராஜகோபுரங்களுடனும், கோட்டை போன்ற மதிற் சுவர்களுடனும், தென்னிந்தியக் கோயில்களின் பாரிய வடிவில் அமைந்திருந்தது. பிலிப் தே ஒலிவேறா அப் பெரிய கோயிலை இடித்துத் தரைமட்டமாக்குமாறு கட்டளையிட்டான். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை அடி அத்திவாரத்தோடு கிளறிக் குவிக்குமாறு கட்டளையிட்டான். முருகைக் கற்களினாலும், சுண்ணாம்புக் கற்களினாலும் சுதைகொண்டு கட்டப்பட்டிருந்த அக் கோயிலின் கற்கள் மலைபோலக் குவிந்தன.

'இக் கோயிலில் கிறிஸ்தவரல்லாதவர்கள் மிக்க ஈடுபாடுடையவர்களாக இருந்தனர். அவன் அதனை அழிக்காது விட்டால், அவன் விரும்பிய எல்லாவற்றையும் வழங்குவதாக யாழ்ப்பாணப் பிரமுகர்கள் அவனுக்கு வாக்குறுதி அளித்தனர். ஆனால், அவன் ஒரு மதப்பற்று மிக்க கத்தோலிக்கனாதலால், அவர்களின் நடவடிக்கை அக் கோயிலை அழிப்பதற்குக் கொண்டிருந்த விருப்பத்தினை மேலும் அதிகரிக்க வைத்தது. எனவே அதனை 'அத்திவாரமில்லாது அழிக்குமாறு கட்டளையிட்டான்' என குவேறோஸ் பாதிரியார் தனது நூலில் கூறுகிறார். ஒலிவேறா, யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளிலிருந்த சைவாலயங்கள், வைணவ ஆலயங்கள் அனைத்தையும் உடைத்துத் தள்ளுமாறு பணித்தான். கீரிமலைத் திருத்தம்பலேஸ்வரன் கோயில், பொன்னாலை வரதராசப்பெருமாள் கோயில் போன்ற பெரிய ஆலயங்களும் தரைமட்டமாக்கப்பட்டன. போர்த்துக்கேயப் பறங்கிகளின் கண்களிற் பட்ட சைவக் கோயில்கள் அனைத்தும் கற்குவியலாக்கப்பட்டன.

நல்லூரிலிருந்து போர்த்துக்கேய ஆட்சியை பிலிப் தே ஒலிவேறா நடாத்தியபோதிலும், தமிழர்களுடன் நடந்த போர் முடியவில்லை. சுதந்திர வேட்கை கொண்டு கிளர்ந்தெழுந்த தமிழ் வீரர்கள், தங்களது தாயக மண்ணிலிருந்து அந்நியரைத் துரத்திவிடும் எண்ணம் கொண்டவர்களாக இடைக்கிடையே படைதிரட்டிப் பறங்கிகளைத் தாக்கி வந்தனர். வருணகுலத்தான் என்பான் தஞ்சாவூர்ப் படையொன்றுடன் ஒலிவேறாவை எதிர்த்துத் தோல்வி கண்டான். பின்னர் சின்ன மீகாப்பிள்ளை என்பான், தமிழ்ப்படையொன்றுடன் தொண்டைமானாற்றில் இறங்கி நல்லூரை முற்றுகையிட்டு தோல்வி காண நேர்ந்தது. தஞ்சாவூர் நாயக்கன் அனுப்பிய மற்றொரு படையும் தோல்வியுற்றுத் திரும்ப நேர்ந்தது.

நல்லூரில், சமதரையில், கிளர்ந்தெழும் தமிழர்களுக்கு மத்தியில், தங்கிருப்பதிலுள்ள பாதுகாப்பின்மையைப் போர்த்துக்கேயத் தளபதி புரிந்துகொண்டான். தானும், தனது படைவீரர்களும், பறங்கிகளும் தங்கியிருப்பதற்குப் பாதுகாப்பான ஒரு கோட்டை இருக்க வேண்டியதன் அவசியத்தை, ஒலிவேறாவுக்குத் தொடர்ந்து நிகழ்ந்த தாக்குதல்கள் உணர்த்தின. அதனால், நல்லூரில் இடித்துக் குவிக்கப்பட்ட கற்களைப் பயன்படுத்தி, பண்ணையில் 'ஒரு கோட்டையைக் கட்டி முடிக்கப் பிலிப் தே ஒலிவேறா விரும்பினான்.

முஸ்லீம் வர்த்தகசாலைகள் அமைந்திருந்த இடம், கோட்டை அமைப்பதற்கான மையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்திரே பூர்த்தாடு டி மென்டொன்சாவினால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுக் கொள்ளையிடப்பட்ட முஸ்லீம் பண்டகசாலைகள் இருந்த இடத்தில் யாழ்ப்பாணத்தின் கோட்டையைக் கட்டத் திட்டமிடப்பட்டது. அவ்விடத்தின் அமைவிடம் பலமான கோட்டையொன்றினை அமைப்பதற்கு மிக வாய்ப்பானதாக இருந்தது.



**போர்த்துக்கேயர் அமைத்திருந்த யாழ்ப்பாணக்கோட்டை (1672 இல் பால்தேயஸ் பாதிரியார் வரைந்தபடி)**

போக்குவரத்துக்கு வாய்ப்பான கடனீரேரி, அருகிலிருந்த கொழும்புத்துறை, அலுப்பாந்தித்துறை, அகழிகளுக்கு நீர் தரக்கூடிய கடல், பகைவர்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு வழங்கக்கூடிய இடவமைப்பு என்பன ஒலிவேறாவுக்குத் திருப்தியைத் தந்தன. தமிழ்ச் சைவர்கள் வாழும் நல்லூர் நகரிலிருந்து விலகிப் பாதுகாப்பான அரண் ஒன்றினை அமைத்துக் கொள்வதுடன், கத்தோலிக்கர்கள் மட்டும் வாழ்கின்ற 'பறங்கித் தெரு' (சீதாரி) என்ற புதியதொரு நகரினையும் உருவாக்க அவன் எண்ணம் கொண்டான்.

கோட்டை கட்டுவதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டதும், அதனைக் கட்டுவதற்கான கற்கள் அவ்விடத்தில் சேகரிக்கப்பட்டன. முதற்கட்டமாக நல்லூர் பெரிய கோயிலை இடித்ததால் குவிந்து கிடக்கும் கற்குவியல்கள் அவ் இடத்திற்குக் கொண்டுவரப்பட்டன. முருகைக் கற்கள், சுண்ணாம்புக் கற்கள், செங்கட்டிகள் என்பன பாரிய கூடார வண்டிகளில் முதலில் ஏற்றப்பட்டுப் பண்ணைக் கரையில் சேர்க்கப்பட்டன.

அவை காலதாமதத்தை ஏற்படுத்துகின்றது என்பதை உணர்ந்த ஒலிவேறா, யாழ்ப்பாண மக்களையும் தனது படை வீரர்களையும் நல்லூரிலிருந்து பண்ணை வரை மனிதச் சங்கிலியாக வரிசையாக நிற்கவைத்துக் கற்களை வேகமாகக் கரம் மாற்றி அனுப்பிப் பண்ணைக் கரையில் குவிப்பித்தான். அதே முறையில் யாழ்ப்பானத்தில் இடித்துத்தள்ளப்பட்ட சைவ ஆலயங்களின் கற்களையும் பண்ணைக் கரையில் சேர்ப்பித்தான். குவிக்கப்பட்ட கற்கள் கோட்டை கட்டுவதற்குப் போதுமானவையாக இருக்கவில்லை. எனவே, எஞ்சிய கோயில்களையும் அவசியமாயின் சைவரின் பெரும் வீடுகளையும் அவன் இடித்துத் தள்ளிவிடுவான் என்ற பயத்தில் கோட்டை கட்டுவதற்குத் தேவையான முருகைக் கற்களை யாழ்ப்பாணத்திற்கு அருகில் இருக்கும் தீவுகளிலிருந்து தோணிகள் மூலம் சேகரித்துத் தருவதாக யாழ்ப்பாணத்து முதலிமார்களும், வன்னிமைகளும் வலிந்து ஒத்துக்கொண்டனர்.

அதற்குரிய செலவினைத் தருவதாக ஒலிவேறா ஒப்புக்கொண்டான். அயற் தீவுகளிலிருந்து முருகைக் கற்கள் தோணிகள் மூலம் கொண்டுவரப்பட்டன. ஒவ்வொரு தோணி முருகைக் கற்களுக்கும் 3 பணம் வழங்கப்பட்டது. அதனால் தோணிகளையுடைய பலரும் இதில் ஈடுபட்டனர். வேலணை (தண்ணீர்த்தீவு), புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு முதலான தீவுகளைச் சேர்ந்தவர்கள் முருகைக் கற்களைச் சேகரித்துக் குவித்துத் தோணிகளுக்கு வழங்கினர். அதற்கு அரைப்பணம் பெற்றுக்கொண்டனர். அக் கற்களை ஏற்றிச் செல்லும் தோணிகளுடன் காவலாகப் போகும் அதிகாரத்துக்கு மாதம் ஒன்றுக்குப் பதின்மூன்று பணம் சம்பளமாக வழங்கப்பட்டது.

கோட்டை கட்டுவதற்குரிய சுதை தயாரிப்பதற்கான சுண்ணாம்புக் காளவாய்கள் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் அமைக்கப்பட்டன. அவை சுண்ணாம்புக் கற்களைச் சுட்டுப் பதமாக்கிப் பண்ணைக் கரையில் சேர்த்தன. அவற்றோடு கலப்பதற்காகக் கோவாவிலிருந்து சர்க்கரை மூட்டைகள் பெருமளவிலும் எடுத்துவரப்பட்டன; களிமண்ணும் அவற்றோடு சேர்ப்பதற்காகக் குளங்களிலிருந்து அகழ்ந்தெடுத்துக் குவிக்கப்பட்டது. சுட்ட சுண்ணாம்பும், சர்க்கரையும், களிமண்ணும் சேரும்போது, முருகைக் கற்களைப் பலமாகப் பற்றும் சுதை உண்டாகிறது. இப்போது அனைத்தும் தயார்.

யாழ்ப்பாணத்தில் இருந்த சைவாலயங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட முருகைக் கற்களும், சுண்ணாம்புக் கற்களும் நீள் சதுரக் கனங்களாகக் கல் தச்சர்களினால் பொழியப்பட்டிருந்தன. அவ்வாறு பொழியப்பட்ட கற்கள், கோட்டையை இலகுவாக அமைப்பதற்குப் போர்த்துக்கேயருக்கு உதவின.

கோட்டை கட்டுவதற்கு போர்த்துக்கேய மேசன்மாருடன் உள்ளூர் மேசன்மார்களும் பங்குகொண்டனர். தலைமை மேசன் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 1 பணமும், அவனுக்குக் கீழ் வேலை செய்யும் மேசன்மார்களுக்கு நாளொன்றிற்கு அரைப்பணமும் கூலியாக வழங்கப்பட்டது. ஒரு தலைமை மேசனின் கீழ் நான்கு துணை மேசன்மார் வேலை பார்த்தனர். கோட்டை கட்டுவதில் சிற்றாள்களாக வேலை பார்த்த ஊழியக்காரர் ஒவ்வொருவருக்கும் சாப்பாட்டிற்கு வருடம் ஒன்றுக்கு 70 கண்டி சாமி அரிசி வழங்கப்பட்டது. கோட்டை கட்டும் வேலையைப் பலர் மேற்பார்வை செய்தனர். அவர்களைப் பண்டாரப்பிள்ளைகள் என்றனர். அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 8 பணம் சம்பளமாக வழங்கப்பட்டன.

(தொடரும்)

படிப்பகம்